(2020) 4 எஸ்சிஆர் 944

ஆரிபாபென் யூனுஸ்பாய் பட்டேல் மற்றும் பலர்

–எதிர்–

முகுல் தாக்கோரிபாய் அமின் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1643–1644 2020)

2020 மார்ச் 17

மாண்புமிகு நீதியரசர் திரு. எல். நாகேஸ்வர ராவ்

மற்றும்

மாண்புமிக நீதியரசர் திரு. தீபக் குப்தா

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – கட்டளை XXI , விதி 90 – காலவரையறைச் சட்டம், 1963 – பிரிவு 14 மற்றும் மூன்றாம் பிரிவு , பகுதி I வகுமுறைக் கூறு 127 – கட்டளை XXI, விதி 90 இன் கீழ் ஆட்சேபனை மனு எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டதா இல்லையா? –2–ஆர் எதிர்மேல்முறையீட்டாளர் கூட்டுறவு வங்கியிலிருந்து 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் கடன் பெற்றுள்ளார் மற்றும் கடனைத் திரும்ப செலுத்த தவறிவிட்டார் – 1 மற்றும் 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரிடமிருந்து உரிய தொகையை வசூலிக்க 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சுருக்கு விசாரணை நடவடிக்கைத் தாக்கல் செய்தார் – 1 மற்றும் 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராகவும் 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு சாதகமாகவும் தீர்ப்பாணை வழங்கப்பட்டது – 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் நிறைவேற்றுகை தீர்ப்பாணை தாக்கல் செய்துள்ளார் – மேற்படி விண்ணப்பத்தை

நீதிமன்றம் அனுமதித்தது மற்றும் பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்களை விற்பதற்கு நீதிமன்ற சொத்துப் பேனுநருக்கு அணுமதி வழங்கப்பட்டது – சொத்துக்களின் ஏலத்தில் மேல்முறையீட்டாளர் அதிக தொகைக்கு ஏலும் கேட்டவர் , மேலும் நிறைவேற்றுகை நீதிமன்றம் விற்பனையை அனுமதித்தது – ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் கால அவகாசம் கோரினார் – ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்குப் பதிலாக, 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சொத்துக்களின் விற்பனையை எதிர்த்து நீ.பே. மனு தாக்கல் செய்துள்ளார் – நிறைவேற்றுகை நீதிமன்றம், மேல்முறையீட்டாளர்களுக்கச் சாதகமாக விற்பனை சான்று வழங்கியது – வாங்குபவர் அதிக விலையில் சொத்துக்களை வாங்க விரும்புவதாக 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டதன்பேதில், உயர் நீதிமன்றம் அதை அனுமதித்தது – மேல்முறையீட்டாளர்கள் உரிமைப்பட்டய மேல்முறையீட்டை தாக்கல் செய்தனர், அது உயர் நீதிமன்றத்தின் தனி நீதியரசரால் நிறுத்திவைக்கப்பட்டது – பாதிப்படைந்த 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சிறப்பு அனுமதி மனுவை தாக்கல் செய்தார் – இதற்கிடையே செத்துக்களின் விற்பனையை அங்கீகரிக்கவில்லை என நிறைவேற்றுகை நீதிமன்றத்தில் முன்பு 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மனு தாக்கல் செய்தார் – 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை தொடர்ந்து, 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 21.04.2008 தேதியிடப்பட்ட சி.அ.ம.ஐ திரும்பப்பெறக் கோரி எதிர் வாதுரை தாக்கல் செய்து, 20.6.2008

அன்றும் உவிமுச கட்டளை XXI விதி 90 இன் கீழ் ஆட்சேபணை மனு ஒன்றை தாக்கல் செய்தார் – நீதிப்பேராணை மனு 17.7.2008 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், நிறைவேற்றுகை மனுவிற்கான ஆட்சேபணை 20.6.2008 அன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும், அது காலவரையறைக்கு உட்பட்டது என்றும் 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வாதுரைத்தார் – முடிவு 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளமுடியாது – காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14 இன் பயன் கோரும் எந்த நபரும், உரிய செயல்பாட்டுடனும் நல்லெண்ணத்துடனும் கூடிய மற்றொரு நிவாரணத்திற்காக தொடரக்கூடிய அந்த காலவரையறை நீக்கம் மட்டுமே கோரமுடியும் – நீ.பே. மனுவானது நல்லெண்ணத்துடன் உரிய செயல்பாட்டுடனும் தாக்கல் செய்யப்படவில்லை ஏனெனில், செயலாற்றக் கோரும் மனுவிற்கு அவர் ஆட்சேபணை தாக்கல் செய்யப்போவதாக எதிர்மேல்முறையீட்டாளர் எதிர்வாதுரை தாக்கல் செய்தார்– இருப்பினம், 21.4.2008 அன்று உச்ச நீதிமன்றம் முன்பு எதிர் வாதுரை செய்த பின்னர் இந்த நடவடிக்கைகள் நல்லெண்ணத்தின்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எடுத்துக்கொண்டாலும்கூட, நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பு அவர் உடனே மனுதாக்கல் செய்திருக்கவேண்டும் – உயர் நீதிமன்றம் முன்பு நடவடிக்கைகள் தொடர்வது, நல்லெண்ணத்தின் அடிப்படையில் செய்யப்பட்டது என்றோ அல்லது உரிய செயல்பாட்டுடன் உள்ளது என்றோ கூறமுடியாது – ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையிலான எல்லா நாட்களின் பயனைத் தந்தால்கூட, உரிமையியல் நடைமுறைச் சட்டம்

கட்டணை XXI, விதி 90 இன் கீழ் மனு தாக்கல் செய்ய 6 நாள்கள் காலவரையறை காலம் கடந்துவிட்டது – அத்தகைய காலதாமதத்தை மன்னிக்க எந்த அதிகாரமும் இல்லையென்பதால், காலவரையறையினால் தடை செய்யப்படுகிறது என்பதன் பேரில் அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன

முடிவு 1. இந்த வழக்கைப் பொறுத்தவரை, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXI விதி 90 இன் கீழ் ஆட்சேபனை மனுவினைத் தாக்கல் செய்ய, எதிர்மேல்முறையீட்டாளர் 3 சார்பாக முன்னிலையாகும் வழக்குரைஞர் ஆனுமதி கோரும்போதே 18.12.2007 இல் நடக்கும் விற்பனை குறித்து அறிந்துள்ளது, 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் பிரச்சினை எழுப்பப்படவில்லை. நீ.பே. மனு 26.12.2007 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பாக 18.03.2008 அன்று எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் காரணமாக இந்த நீதிமன்றத்தின் முன் இருந்த சிறப்பு அனுமதி மனுவை, 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 21.04.2008 அன்று திரும்பப்பெற்றுக்கொண்டார். நீ.பே. மனுவும் 17.7.2008 இல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 17.07.2008 இல் நீ.பே. மனு முடிவு பெற்றதாலும் மற்றும் செயலாற்றக் கோரும் மனு மீது ஆட்சேபனைகள் 20.06.2008 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், அது காலவரம்பிற்குள் உள்ளது என 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக வலியுறுத்தப்பட்டது. (பத்தி 11)

2. இந்த முன்மொழிவை நாங்கள் ஏற்க இயலவில்லை. காலவரையறைச் சட்டம் பிரிவு 14 இன் பயன் கோரும் எந்த நபரும், உரிய செயல்பாட்டுடன் மற்றும் நல்லெண்ணத்துடனும் கூடிய மற்றொரு நிவாரணத்திற்காக தொடரக்கூடிய அந்தக் காலவரம்பினை நீக்கி மட்டுமே கோர இயலும். செயலாற்றும் மனுவிற்கு அவர் ஆட்சேபனை தாக்கல் செய்யப்போவதாக, 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர் 18.12.2007 இல் ஒரு அறிக்கை வெளியிட்டதன் காரணமாக நீ.பே. மனு நல்லெண்ணத்துடனும், உரிய செயல்பாட்டுடனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக் கூறமுடியாது என நாங்கள் கருதுகிறோம். இருப்பினும், 21.4.2008 அன்று உச்ச நீதிமன்றம் முன்பு அறிக்கை செய்த பிறகு இந்த நடவடிக்கைகள் நல்லெண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று எடுத்துக்கொண்டாலும்கூட நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பு 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் உடனே மனுதாக்கல் செய்திருக்கவேண்டும். உயர் நிதிமன்றம் முன்பு நடவடிக்கைகள் தொடர்வது, நல்லெண்ணணத்தின் அடிப்படையில் செய்யப்பட்டது. என்றோ அல்லது உரிய செயல்பாட்டுடன் உள்ளது என்றோ கூறமுடியாது. (பத்தி 12)

3. சிறந்தவாறு, எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் நாங்கள் ஏற்றுக்கொண்டாலும்கூட 26.12.2007 முதல் 21.4.2008 வரையிலான காலம் நீக்கப்படலாம். அந்தக் காலத்தை நாங்கள் நீக்கினாலுங்கூட, டிசம்பரில் 7 நாள்கள், ஏப்ரலில் 9 நாள்கள், மேயில்

31 நாள்கள் மற்றும் ஜூனில் 19 நாள்கள் உள்ளன. எனவே, இந்த அனைத்து நாட்களையும் நீக்கி உத்திரவு வழங்கி பயன் தந்தாலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டணை XXI விதி 90 இன் கீழ் 1 மற்றும் 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மனு தாக்கல் செய்ய 6 நாள்கள் காலவரம்பால் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய தாமதத்தைப் பிழை பொறுக்க எந்த அதிகாரமும் இல்லையென்பதால், காலம்கடந்த ஒன்று என மனுக்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டியவை . எனவே, இந்த சிறிய காரணத்தால் மேல்முறையீடு அனுமதிக்கவேண்டியதாகிறது. (பத்தி 13)

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்ப உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1643–1644/2020

அகமதாபாத்தில் உள்ள குஜராத் உயர்நீதிமன்றத்தின் சிறப்பு உரிமையியல் விண்ணப்ப எண் 3166 / 2010 இல் 07.11.2012 மற்றும் 08.11.2012 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுகளிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண் 1647/ 2020 மற்றும் நீதிமன்ற அவமதிப்பு மனு (உரிமையியல்) எண் 63 /2020 சிறப்பு அனுமதி மன (உரிமையியல்) மனுக்கள் 1643–1644 (உரிமையியல்) /2020 இல்

**வழக்குரைஞர்கள்:**

K. V. விஸ்வநாதன், மூத்த வழக்கறிஞர்,

ரிஷாப் சான்செட்டி, திருமதி. பத்மப்ரியா,

அஞ்சித் பண்டரி, சுயஷ் ராவத்,

கே. பாரி வெந்தன், ஆர். வெங்கடராமன்,

நிகிலேஷ் ராமச்சந்திரன், திருமதி. ஷிட்டல் உபாத்யாயா,

நவ்தீப் ஜெயின், நிகில் கோயல்,

திருமதி. நவீன் கோயல், துஷ்யந்த் சர்னா,

வினய் மேத்யூ .... முன்னிலையாகும் தரப்பினர்களுக்காக

**தீர்ப்புரை**

**மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா :**

1. இங்குள்ள 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான (இதில் இதற்கு பிறகு எ.மே.3 என குறிப்பிடப்படும்) தி/ள் அபிலாஷா கன்ஸ்ரக்ஷன் இங்குள்ள 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான (இதில் இதற்கு பிறகு எ.மே.2 என குறிப்பிடப்படும்) ஸ்ரீ மஹாலக்ஷ்மி மெர்கன்டைல் கோ–ஆப் பேங்க் லிமிடெட் இடமிருந்து கடன்பெற்று அதை செலுத்தத் தவறிவிட்டார், 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், முகுல் தகோரிபாய் அமின், மேற்படி நிறுவனத்தின் பங்குதாரரான இங்குள்ள 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் (இதில் இதற்கு பிறகு எ.மே.1 என குறிப்பிடப்படும்) ஆகியோரிடமிருந்து நிலுவைத் தொகையை மிளப்பெறுவதற்கு எ.மே.2 சுருக்க வழக்கு நடவக்கையை தாக்கல் செய்தார். வழக்கு நிலுவையிலிருக்கும்போது,

12 அடுக்குமாடி வீடுகள் மற்றும் 2 சரிவுக்கூறை வீடுகளை விடுவிக்க எ.மே.3 மனு தாக்கல் செய்தார், அவை ரூ.65 லட்சத்தை மேற்படி எதிர்மேல்முறையீட்டாளர்கள் வைப்பீடு செய்ததன்பேரில் விடுவிக்க அனுமதிக்கப்பட்டது. ஆயினும், 1 மற்றும் 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அத்தொகையை செலுத்தத் தவறிவிட்டனர். 12.08.2004 அன்று, எ.மே.2 ஆல் கோரப்பட்ட தொகையில் 33% வைப்பீடு செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் வழக்கை மேல் நடத்த பிரதிவாதிகளுக்கும் தீர்வு செய்யும் அதிகாரி அனுமதி வழங்கினார். அந்த தொகையும் வைப்பீடு செய்யப்படவில்லை. அதன் பின்னர் எ.மே.2 க்கு ஆதரவாகவும், 1 மற்றும் 3 எதிர்மேல்முறையீட்டாளர் உட்பட்ட பிரதிவாதிகளுக்கு எதிராகவும் 14.9.2004 அன்று தொகை ரூ.1,89,94,105.50–க்கான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. உரிமையியல் மேல்முறையீடு எண் 1643–1644/2020 இல் நாங்கள் இந்த சங்கதிகளை அளித்துள்ளோம். உரிமையியல் மேல்முறையீடு எண் 1644/2020 ஐ பொருத்தவரையில், அது 13.01.2008 அன்று வெளியிடப்பட்ட பங்களாவின் விற்பனை விளம்பரம் மற்றும் 03.03.2008 அன்று அளிக்கப்பட்ட விற்பனை தொடர்புடையது.

2. மேற்படி 14.9.2004 தேதியிடப்பட்ட தீர்ப்பாணையானது, குஜராத் மாநில கூட்டுரவு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு மூலம் எதிர்க்கப்பட்டது. நிறுத்திவைப்பு உத்தரவு ஏதும் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. இதற்கிடையில், 01.11.2007 அன்று வதோதரா, உரிமையியல் நீதிமன்றத்தின் மூன்பு 2 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தீர்ப்பாணையை நிறைவேற்றும்படி விண்ணப்பம் தாக்கல் செய்தார்.

மறு நாளான 02.11.2007 அன்று, நிறைவேற்றுகை தீர்ப்பாணையிடுவதற்காக வழக்குறு சொத்து பெறுநரை நியமிப்பதற்கு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் 02.11.2007 அன்று மேற்படி விண்ணப்பத்தை அனுமதித்தது, நீதிமன்ற சொத்து பேணுநர் சொத்தை விற்கும்படி அனுமதிக்கப்பட்டு, அதை 15 நாள்களுக்குள் நீதிமன்றத்தில் அறிவிக்கும்படி கூறப்பட்டது. சொத்தின் பற்றுகைக்காக எ.மே.2 ஆல் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு, அதில் 02.11.2007 அன்றும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மேற்படி சொத்தின் ஏல விற்பனைக்கான விளம்பரம் 21.11.2007 அன்று நாளிதழில் வெளியானது. மேற்சொன்ன விளம்பரத்தில் குறைந்தபட்ச விற்பனை விலை குறிப்பிடப்படவில்லை. விற்பனைக்கான பொது அறிவிப்பை அடுத்து, பற்றுகைச் சொத்தின் ஏல விற்பனை 26.11.2007 அன்று நடைபெற்றது, அதில் மேல்முறையீட்டாளர்கள் ரூ.78,25,251/– ஏலம் கேட்டனர். அதில் இரு ஏலம் கேட்டவர்கள் மட்டுமே இருந்தனர், மேல்முறையீட்டாளர்கள் உயர் நிலை கேட்ட ஏலதாரர்கள் , அவர்கள் அந்த இடத்தில் விற்பனைத் தொகையின் 25%ஐ வைப்பீடு செய்தனர். அதன் பின்னர் 10.12.2007 அன்று எ.மே.2 விற்பனையை உறுதி செய்வதற்காக அனுமதிக்கேட்டார், நிறைவேற்றுகை நீதிமன்றம் நீதிமன்ற சொத்துப் பேணுநரின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு, அதை நிறைவேற்றும்படி அவருக்கு அனுமதி அளித்தது. அதற்குப் பின்னர் , சொத்துப் பேணுநர் விளக்கம் கோரும் சில விண்ணப்பத்தை தாக்கல் செய்தார், 18.12.2007 அன்று எ.மே.3 இன் சார்பாக முன்னிலையாகம் வழக்குரைஞர், எதிர்ப்புரை தாக்கல் செய்வதற்கு அவகாசம் கோரினார்.

3. மறுப்புரை தாக்கல் செய்வதற்குப் பதிலாக, 12 அடுக்குமாடி மற்றும் சரிவுக்கூரை வீடு ஆகியவற்றினை நீதிமன்ற ஏலத்தின் தொடர்ச்சியாக விற்பனை செய்ததை எதிர்த்து குஜராத் உயர் நீதிமன்றம் முன்பு, எ.மே.1, நீதிப் பேராணை மனு தாக்கல் செய்தார். இம் மனு 26.12.2007 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செயலாற்றும் நீதிமன்றத்தின் முன்பு எ.மே. 1 ஆஜராகி, மேல்நடவடிக்கைகளுக்கு தடையினை செயலாற்றும் நீதிமன்றத்தில் கோரியதாகவும் தெரிய வருகிறது. ஆரம்பத்தில், நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 (சுருக்கமாக உவிமுச.) கட்டணை XXI விதி 90 இன் கீழ் எந்த ஆட்சேபனைகளும் எ.மே.1 தாக்கல் செய்யாதபோது, நிறைவேற்றுகை நீதிமன்றத்தால் 29.2.2008 அன்று மேல்முறையீட்டாளர்களுக்கு சாதகமாக 12 ஆடுக்குமாடி மற்றும் 2 சரிவான கூறை வீடு ஆகியவற்றைப் பொறுத்து விற்பனைச் சான்று வழங்கப்பட்டது.

4. ரூ.17 கோடிக்கு சொத்துக்களை வாங்க ஒரு வாங்குவோர் தயாராகவும், விருப்பமாகவும் இருப்பதாக 05.03.2008 அன்று எ.மே.1 ஆல் ஒரு அறிக்கை வழங்கப்பட்டது. ரூ.50 லட்சம் தொகையை உத்தேச வாங்குவோர் வைப்பீடு செய்ய உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனி நீதிபதி அனுமதித்துள்ளார் மற்றும் தற்போதைய நிலையை தொடர அனுமதிக்கப்பட்டார். இந்தத் தொகையான ரூ.50 லட்சம் வைப்பீடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் உரிமைப் பட்டய மேல்முறையீடு (சுருக்கமாக உவிமுச) தாக்கல் செய்து 01.04.2008 தேததியிட்ட உத்தரவால், 05.03.2008 தேதியிட்ட உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டது. இருவர்

அமர்வின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எ.மே.1 இந்த நீதிமன்றத்தில் சி.அ.ம. ஒன்றை தாக்கல் செய்தார். சொத்து விற்கப்பட அந்த அதிகாரி அங்கீகரிக்கப்படவில்லை என்ற காரணத்தால், இதற்கிடையில் எ.மே.2 நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பு மனு தாக்கல் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. எனவே, நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பு எ.மே.2 ஆல் மனுதாக்கல் செய்யப்பட்டதைக் கருத்திற்கொண்டு, எ.மே.1 இன் கற்றறிந்த வழக்குரைஞரின் அறிக்கையால் 21.4.2008 அன்று சிஅ.ம–ஐ திரும்பப்பெற அனுமதி வழங்கப்பட்டது. அதன் பிறகு, 20.06.2008 அன்று, சிஅம கட்டளை XXI விதி 90 இன் கீழ், எ.மே.1 ஒரு மனு தாக்கல் செய்தார் மற்றும் மனுவை நிறைவேற்றுவதற்கோ அல்லது சொத்தை பற்றுகை செய்யவோ அல்லது விற்பனை பொது அறிவிப்பின் வரையறைகளை தீர்வு செய்யும் முன்போ, எந்த அறிவிப்பும் எ.மே.1 அல்லது எ.மே.3 க்கு அனுப்பப்படவில்லை என்பதுதான் இந்த மனுவின் முக்கிய குறைபாடாகும். அதனுடன் சேர்த்து, அடகு விலையை விட மிகக் குறைவான விலைக்கு சொத்து விற்கப்பட்டுள்ளது என்பது மற்றுமொரு குறைபாடாகும்.

5. நிறைவேற்றும் நீதிமன்றம் முன்பாக உ.விமு.ச., கட்டளை xxi விதி 90 இன் கீழ் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது என உயர் நீதிமன்றம் முன்பு 17.7.2008 அன்று எ.மே.1 சமர்ப்பித்துள்ளார் மற்றும் உயர் நீதிமன்றம் கீழ்க்கண்ட கருத்தைப் பதிவு செய்துள்ளது

> " விற்பனையை நீக்கறவு செய்வதற்கு, மனு தாக்கல் செய்ய காலவரம்பு குறித்த வினாவும் எழுப்பப்படக்கூடும் என மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.

மஜீம்தார் சமர்ப்பித்துள்ளார். விற்பனையை நீக்கறவு செய்வதற்கான மனு மீது தகுதியினடிப்படையில் முடிவு செய்யப்படும் மற்றும் காலவரம்பு குறித்து அவர்கள் ஆட்சேபணை எழுப்பமாட்டார்கள் என 7 ஆம் மற்றும் 8 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக ஆஜராகும் கற்றறிந்த முத்த வழக்குரைஞர் திரு. சஞ்சன் வாலா உடன் கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி சோனால் ஷா மற்றும் 9 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக ஆஜராகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சையத் இன்றிலிருந்து ஒரு வார காலத்தைக் கோரி தரப்பினர்கள் அதே நிலையைப் பராமரிப்பார்கள் என சமர்ப்பித்துக்கொண்டார். "

6. 25.07.2008 அன்று, முன்னதாக பதிவு செய்யப்பட்ட எல்பிஏ செயலாற்றது என தள்ளுபடி செய்யப்பட்டது. 17.7.2008 தேதியிட்ட உத்தரவில் பதிவு செய்யப்பட்ட காலவலம்பு குறித்து பிரச்சினை எழுப்பமாட்டோம் என்கிற சலுகையைத் திரும்பப்பெற மேல்முறையீட்டாளர்கள் இங்கு 07.10.2008 அன்று மனுதாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. அதன் பின்னர், எஸ்எல்பி (சி) எண் 26745–26746 /2008 தாக்கல் செய்து இந்த நீதிமன்றத்தை, மேல்முறையீட்டாளர்கள் அணுகியுள்ளனர்.இந்த மனுக்கள் 23.3.2009 இல் முடிவு செய்யப்பட்டது மற்றும் அந்த உத்தரவில் சம்பந்தப்பட்ட பகுதி கீழ்க்கண்டவாறு படிக்கப்படுகிறது:–

".... இந்த வழக்குகளில், மனுதாரர் தரப்பில் வாதிட்டு கோரப்படுவது யாதெனில், விற்பனை ஏலம் நடத்துவதில் மோசடி உள்ளது என்கிற செயலாற்றும் மனு காலங்கடந்த ஒன்று என்பதாகும். நிறைவேற்றுகை நீதிமன்றத்தால் அந்தக் கேள்வி முடிவு செய்யப்படவேண்டியது அவசியமாகிறது. ஆனால், செயலாற்றக் கோரும் மனு காலம் கடந்தது என்ற முடிவுக்கு வந்தாலும்கூட விற்பனை நடந்ததில் மோசடி உள்ளதா என்பதற்கு தனது முடிவைத்தர, நிறைவேற்றுகை நீதிமன்றத்திற்கு நாங்கள் உத்திரவிடுகிறோம். கால வரம்பு குறித்த வினாவை முடிவு செய்யும்போது, காலவரம்புச் சட்டத்தின் பிரிவு 5 மற்றும் 14 பொருத்தமானதா என்பதையும் நோக்கத்தையும் கூட நிறைவேற்றுகை நீதிமன்றம் முடிவு செய்யும்.

அதன் பின்னர், அந்த விடையத்தை நிறைவேற்றுகை நீதிமன்றத்திற்கு திருப்பப்பட்டு, விரிவான உத்தரவு மூலம் உ.விமு.ச., கட்டளை XXI விதி 90 இன் கீழ் 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த நிராகரிக்கப்பட்டது. அதன் பின்னர், உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, செயலாற்றுகை நீதிமன்றத்தின் உத்தரவை 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் எதிர்த்து அது எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் அனுமதிக்கப்பட்டது. செயலாற்றுகை மனுவிற்கு ஆட்சேபனனகள் ஆர்.1 ஆல் தாக்கல் செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்றும் மேல்முறையீட்டாளர்களுக்கு சாதகமான விற்பனை

நீக்கறவு செய்யப்பட்டுள்ளது. மனுவின் தகுதிகள் குறித்து உயர் நீதிமன்றம் பார்த்தது ஆனால் காலவரம்பு குறித்த பிரச்சினையை முடிவு செய்யவில்லை. காலவரம்பு குறித்து மேல்முறையீட்டாளர்கள் வேண்டகோள் எழுப்பியிருந்ததை உயர் நீதிமன்றம் கவனித்திருந்தாலும், அது அதனை முடிவு செய்யவில்லை மற்றும் இது குறித்த உயர் நீதிமன்றத்தின் கருத்துக்கள் பின்வருமாறு:–

"29. தீர்ப்புக் கடனாளிக்கு அறிவிப்புதராத காரணத்தினால் இரு சொத்துக்களின் ஏலமும் மதிப்பற்றதாகிவிட்டது என்றும் மற்றும் அது ஏல விற்பனையின் செல்லுந்தன்மைக்கு தீர்வு செய்யும் பிழையாக அது இருப்பதால், உச்ச நீதிமன்ற முடிவின் வழியாக, ஏல விற்பனை செய்ததை தொடர்ந்து இருக்க அனுமதிக்கமுடியாது மற்றும் அவை செல்லத்தக்கதல்ல என்றும் நீதிமன்றம் முடிவுக்கு வந்துள்ளது. ஏலத்தில் வாங்கியோருக்கான வழக்குரைஞரின் பிற வாதங்கள் விரிவாக பார்க்கவேண்டிய அவசியமில்லை, ஆனால், சட்டபூர்வ வகைக் கூறுகளின்படி தீர்ப்புக் கடனாளிக்கு அறிவிப்பு அனுப்பாத காரணத்தினால் நீதிமன்றம் ஏல விற்பனையை செல்லாததாக்கியது என்று கூறுவதே போதுமானது."

இதில் மேலே குறிப்பிடப்பட்ட, இந்த நீதிமன்றத்தின் உத்தரவை உயர் நீதிமன்றம் முழுவதும் புறந்தள்ளியுள்ளது என நாங்கள் கருதுவது அவசியமாகிறது. காலவரம்பு மற்றும் தகுதியின் மீதான

ஆட்சேபனைகள் ஆகிய இரண்டையும் முடிவு செய்ய இந்த நீதிமன்றம் குறிப்பாக செயலாற்றும் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளது. ஒருவேளை, பின்னிட்ட கால வரம்பு குறித்த பிரச்சினை ஆட்சேபனையாளர்களுக்கு சாதகமாக முடியுமாயின், ஆர்.1, ஆர்3 பின்னர் அந்த விடயத்தை வழக்கின் தகுதியின் பேரில் முடிவு செய்ய திருப்பி அனுப்பக்கூடாது என்கிற காரணத்திற்காக இது தெளிவாக செய்யப்பட்டுள்ளது. காலவரம்பு குறித்த பிரச்சினையை புறந்தள்ளியிருக்கக்கூடாது மற்றும் உயர் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

7. சட்டத்தில் கூறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றாது, விற்பனை மோசடியானது என எதிர்மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. நிகில் கோயலால் தெளிவாக வலியுறுத்தப்பட்டதை நாங்கள் பார்த்தோம், எனினும், எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டது காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை முதலில் நாங்கள் முடிவு செய்யவேண்டும் என்று நாங்கள் தெளிவாகக் கருதுகிறோம். காலவரம்பை கடந்து மனு தாக்கல் செய்யப்பட்டிருக்குமாயின், பிற பிரச்சினைகள் குறித்து நீதிமன்றம் பார்க்கவேண்டியது அவசியமில்லை.

8. உவிமுச., கட்டளை XXI விதி 90 பின்வருமாறு :

"90. முறைகேடு அல்லது மோசடி என்ற காரணத்தின் பேரில் விற்பனையை இரத்து செய்வதகு விண்ணப்பம்

அ) ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுகை வாயிலாக அசையாச் சொத்து எதுவும் விற்பனை செய்யப்பட்டிருக்கிறவிடத்து,

தீர்ப்பாணை பெறுநரோ அல்லது விலைக்குவாங்குநரோ அல்லது உடைமைகளை வீதாச்சாரப் பங்கீடு செய்கையில் பங்குக்கு உரிமையுடைய வேறு எந்த ஆளுமோ அல்லது விற்பனையால் தம் அக்கறைகள் பாதிக்கப்படுகிற வேறு எந்த ஆளுமோ, விற்பனை பற்றி வெளியிடுவதில் அல்லது அதை நடத்துவதில் பொருட்டுள்ள முறைகேடு அல்லது மோசடி ஏற்பட்டுள்ளது என்ற காரணத்தின் பேரில் விற்பனையை ரத்து செய்வற்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பக்கலாம்.

2) விற்பனை எதுவும், அது பற்றி வெளியிடுவதில் அல்லது அதை நடத்துவதில் முறைகேடு அல்லது மோசடி ஏற்பட்டது என்ற காரணத்திற்காக ரத்து செய்யப்படுதல் ஆகாது . அத்தகைய முறைகேடு அல்லது மோசடியின் காரணமாக விண்ணப்பத்தாரருக்கு, கணிசமான அளவில் கேடு ஏற்பட்டிருப்பதாக மெய்ப்பிக்கப்பட்ட சங்கதிகளின் பேரில், நீதிமன்றம் திருப்தி கொண்டாலன்றி,

3) இந்த விதியின்படி விற்பனையை ரத்து செய்வதற்கான விண்ணப்பம் எதுவும் எந்தத் தேதியில் விற்பனைப்பிரகடனம் வரையப்பட்டதோ அந்தத் தேதியில் அல்லது அதற்கு முன்பு விண்ணப்பதாரர் சொல்ல முடிந்திருக்கக்கூடிய காரணம் எதன்பேரிலும், ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.

9. காலவரயறைச் சட்டம், 1963 (சுருக்கமாக சட்டம்) பகுதி 1 மூன்றாம் பிரிவு வகுமுறைக் கூறு 127 இன்படி தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்ட விற்பனையை நீக்கறவு செய்வதற்கு விண்ணப்பம்

தாக்கல் செய்வதற்கான காலவரையறை என்பது 60 நாள்களாகும். சட்டத்தின் பிரிவு 5 ஐயும் குறித்துக்காட்டலாம், அது பின்வருமாறு:–

"5. சில நேர்வுகளில் வகுத்துரைக்கப்பட்ட காலத்தின் நீட்டிப்பு மேல்முறையீட்டாளரோ விண்ணப்பதாரரோ மேல்முறையீடு எதனையும் அல்லது உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908 (5/1908) கட்டளை XXI வகுமுறை இன் வகையங்கள் எதனின் கீழும் தொடரப்படும் விண்ணப்பமல்லாத வேறு விண்ணப்பம் எதனையும் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் தொடராததற்கு போதிய காரணம் இருப்பதாக நீதிமன்றத்தை மனநிறைவு கொள்ளச் செய்வாராயின், அம்மேல்முறையீட்டை அல்லது அவ்விண்ணப்பத்தை அந்தக் காலவரம்புக்குப் பிறகும் ஏற்றுக்கொள்ளலாம்.

விளக்கம் வகுத்துரைக்கப்பட்ட காலத்தை கணிப்பதில் (அ) தீர்மானிப்பதில் உயர் நீதிமன்றத்தின் ஆணை, நடைமுறை அ) தீர்ப்பு எதுவும் மேல்முறையீட்டாளரை அ) விண்ணப்பதாரரை தவறான செலுத்திவிட்டிருக்கிற விடயம் இப்பிரிவின் பொருளமைவில் போதிய காரணமாகிடலாம். "

இந்த வகைக்கூறினை சாதாரணமாகப் வாசித்தால், கால நீட்டிப்பு அல்லது காலதாமதப் பிழை பொறுப்பை விளக்கும் இச்சட்டத்தின் குவிமுச., கட்டளை XXI விதி 90 பிரிவு 5 இன் கீழ் உள்ள நடவடிக்கைகளுக்கு பொருந்தாது என்பதைத் தெளிவாகக்காட்டுகிறது. எனவே, தாமதம், ஏதேனம் இருப்பின், அந்த சட்டம் பிரிவு 5 இன் கீழ் பிழைபொறுக்கமுடியாது.

10. சட்டத்தின் பிரிவு 14 பின்வருமாறு :–

"14. ஆளுகை வரம்பற்ற நீதிமன்றத்தில் செய்த நேரிய நடவடிக்கையின் காலம் விலக்கம்–

(1) நன்னம்பிக்கையில் செய்யப்பட்ட வழக்குமுறையீட்டையும், வழக்கு ஒரே விடயம் தொடர்பினதாய் இருக்கின்ற நடவடிக்கையையும் நீதிமன்றம் எதுவோ அதன் ஒன்றில் இருந்து ஆளுகை வரம்பு குறைபாடு அ) அதுபோன்ற இயல்புள்ள மற்ற காரணத்திற்காக அது அனுமதியேற்பு செய்யவியலாததாய் ஆகிறவிடத்து, வழக்கெதற்கும் காலவரம்பு கணிப்பதில் மற்றொரு உரிமையியல் நடவடிக்கை வழக்கு முறையீட்டை விடாமுயற்சியுடன் வாதி செய்திருக்கின்ற காலம் எதுவோ அதை, எதிர்வாதிக்கு எதிராக நீதிமன்றமொன்றில் முதல் நிகழ்வு அ) மேல்முறையீடு அ) சீராய்வு எதுவென்ற போதிலும் விலக்கிடப்படல் வேண்டும்.

2) நன்னம்பிகையில் செய்யப்பட்ட வழக்குமுறையீட்டையும் வழக்கு ஒரே விடய்ம் தொடர்புடையதாய் இருக்கின்ற நடவடிக்கையையும் நீதிமன்றம் எதுவோ அதன் அன்றில் இருந்து ஆளுகைவரம்பு குறைபாடு அ) அதுபோன்ற இயல்புள்ள மற்ற காரணத்திற்காக அது அனுமதியேற்பு செய்யவியலாததாய் ஆகியவிடத்து, விண்ணப்பம் எதற்கும் காலவரம்பு கணிப்பதில் மற்றொரு உரிமையியல் நடவடிக்கை வழக்குமுறையீட்டை விடாமுயற்சியுடன் விண்ணப்பதாரர் செய்திருக்கின்ற காலம் எதுவோ அதை அதே பரிகாரம் கோரும் அதே தரப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றம்

ஒன்றில் முதல்நிகழ்வு அ) மேல்முறையீடு அ) சீராய்வு எதுவென்றபோதிலும் விலக்கிடப்படல் வேண்டும்.

3) உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு ,1908 பிரிவு 5 இன் கட்டளை XXIII இன் 2 வது விதியில், எது எவற்றைக் கொண்டிருப்பினும் அவ்வாணையின் 1 வது விதியின் கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள அனுமதியின்பேரில் தொடுக்கப்பட்டுள்ள புதிய வழக்கொன்றின் தொடர்பில், நீதிமன்றத்தின் ஓர் ஆளுகை வரம்பு குறைபாடு அ) அதுபோன்ற இயல்புள்ள மற்ற காரணத்தின் காரணமாக முதல்வழக்கு தவறிவிட்டது என்கிற அடிப்படை காரணத்தின் பேரில் அத்தகைய முன்னனுமதி வழங்கப்பட்டிருக்கிறவிடத்து இவ்வகையங்களின் உட்பிரிவு (1) பொருந்திடும்.

விளக்கம் இப்பிரிவின் நோக்கங்களுக்காக .

அ) முந்தைய உரிமையியல் நடவடிக்கை நிலுவையில் இருந்த காலமதை விலக்குதல் செய்வதில் நாள் எதில் அந்நடவடிக்கை தொடுக்கப்பட்டதோ அந்நாளும் நாள் எதில் அது முடிவடைந்ததோ அந்நாளும் இரண்டுமே கணக்கிடப்பட வேண்டும்.

ஆ) மேல்முறையீடு ஒன்றை எதிர்த்து வருகிற ஒரு வாதி அ) ஓர் விண்ணப்பதாரர் நடவடிக்கை ஒன்றை வழக்குமுறையீடு செய்வதாக கருதப்படவேண்டும்.

இ) தரப்பினர்கள் அ) வழக்கு மூலங்கள் தவறாக சேர்க்கப்பட்டுள்ளதை ஆளுகைவரம்பு குறைபாடு போன்ற இயல்பினதாய் கருதப்படவேண்டும்."

வரம்புக் குறைபாடு அல்லது பிற காரணத்தால் ஏற்கமுடியாத நிலையில், அத்தகைய நடவடிக்கைகள் நல்லெண்ணத்தில் தொடரப்பட்டிருக்குமாயின் இந்தப் பிரிவின் வரையறைகளின்படி முறையாக ஆழ்ந்து செயல்பட்ட பிற உரிமையியல் நடவடிக்கைகள் தொடர மனுதாரரால் செலவிடப்பட்ட காலம் கழித்துக்கொள்ளப்படலாம்.

11. இந்த வழக்கைப் பொறுத்தவரை, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXI விதி 90 இன் கீழ் ஆட்சேபனை மனுவினைத் தாக்கல் செய்ய, எதிர்மேல்முறையீட்டாளர் 3 சார்பாக முன்னிலையாகும் வழக்குரைஞர் ஆனுமதி கோரும்போதே 18.12.2007 இல் நடக்கும் விற்பனை குறித்து அறிந்துள்ளது, 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் பிரச்சினை எழுப்பப்படவில்லை. நீ.பே. மனு 26.12.2007 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பாக 18.03.2008 அன்று எதிர்மேல்முறையீட்டாளர் 2 ஆல் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் காரணமாக இந்த நீதிமன்றத்தின் முன் இருந்த சிறப்பு அனுமதி மனுவை, 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 21.04.2008 அன்று திரும்பப்பெற்றுக்கொண்டார். நீ.பே. மனுவும் 17.7.2008 இல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 17.07.2008 இல் நீ.பே. மனு முடிவு பெற்றதாலும் மற்றும் செயலாற்றக் கோரும் மனு மீது ஆட்சேபனைகள் 20.06.2008 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், அது காலவரம்பிற்குள் உள்ளது என

1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக வலியுறுத்தப்பட்டது.

12. இந்த முன்மொழிவை நாங்கள் ஏற்க இயலவில்லை. காலவரையறைச் சட்டம் பிரிவு 14 இன் பயன் கோரும் எந்த நபரும், உரிய செயல்பாட்டுடன் மற்றும் நல்லெண்ணத்துடனும் கூடிய மற்றொரு நிவாரணத்திற்காக தொடரக்கூடிய அந்தக் காலவரம்பினை நீக்கி மட்டுமே கோர இயலும். செயலாற்றும் மனுவிற்கு அவர் ஆட்சேபனை தாக்கல் செய்யப்போவதாக, 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர் 18.12.2007 இல் ஒரு அறிக்கை வெளியிட்டதன் காரணமாக நீ.பே. மனு நல்லெண்ணத்துடனும், உரிய செயல்பாட்டுடனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக் கூறமுடியாது என நாங்கள் கருதுகிறோம். இருப்பினும், 21.4.2008 அன்று உச்ச நீதிமன்றம் முன்பு அறிக்கை செய்த பிறகு இந்த நடவடிக்கைகள் நல்லெண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று எடுத்துக்கொண்டாலும்கூட நிறைவேற்றுகை நீதிமன்றம் முன்பு 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் உடனே மனுதாக்கல் செய்திருக்கவேண்டும். உயர் நிதிமன்றம் முன்பு நடவடிக்கைகள் தொடர்வது, நல்லெண்ணணத்தின் அடிப்படையில் செய்யப்பட்டது. என்றோ அல்லது உரிய செயல்பாட்டுடன் உள்ளது என்றோ கூறமுடியாது.

13. சிறந்தவாறு, எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்குரைஞர் நாங்கள் ஏற்றுக்கொண்டாலும்கூட 26.12.2007 முதல் 21.4.2008 வரையிலான காலம் நீக்கப்படலாம். அந்தக் காலத்தை நாங்கள் நீக்கினாலுங்கூட, டிசம்பரில் 7 நாள்கள்,

ஏப்ரலில் 9 நாள்கள், மேயில் 31 நாள்கள் மற்றும் ஜூனில் 19 நாள்கள் உள்ளன. எனவே, இந்த அனைத்து நாட்களையும் நீக்கி உத்திரவு வழங்கி பயன் தந்தாலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டணை XXI விதி 90 இன் கீழ் 1 மற்றும் 3 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் மனு தாக்கல் செய்ய 6 நாள்கள் காலவரம்பால் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய தாமதத்தைப் பிழை பொறுக்க எந்த அதிகாரமும் இல்லையென்பதால், காலம்கடந்த ஒன்று என மனுக்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டியவை . எனவே, இந்த சிறிய காரணத்தால் மேல்முறையீடு அனுமதிக்கவேண்டியதாகிறது.

14. அவ்வாறு, நாங்கள் மேல்முறையீடுகளை அனுமதித்து 07 / 08.11.2008 தேதியிட்ட சிறப்பு உரிமையியல் மனு எண் 3166/2010 இல் வழக்கினை நீக்கறவு செய்கிறோம் மற்றும் சிறப்பு மனு 81/ 2007 இல் 23.02.2010 நாளிட்ட நிறைவேற்றும் நீதிமன்றத்தின் உத்தரவை நிலைநிறுத்துகிறோம். நீதிமன்ற அவமதிப்பு மனு (உரிமையியல்) எண் 63/2020 வும் இந்த தீர்ப்புரை மூலம் தீர்வு செய்யப்படுகின்றன. ஏதேனும் மனுக்கள் நிலையிலிருக்குமானால், அது தீர்வுசெய்யப்படுகின்றன.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

## பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."